# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண்.166 நாள் : 26.05.2026

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள் தலைமையில், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் தேனாம்பேட்டை மண்டலம், கே.பி.தாசன் சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் இன்று (26.05.2026) நடைபெற்றது.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-122, 123, 124, 125, 126 மற்றும் 171 ஆகிய பகுதிகளில் மாநகராட்சி மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால், சாலை, பூங்கா, கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், தெருமின் விளக்குகள், பொதுசுகாதாரம், அம்மா உணவகங்கள், திடக்கழிவு மேலாண்மை, மயானபூமி உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவது தொடர்பாக தொடர்புடைய துறை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் விவரம், பள்ளியின் எண்ணிக்கை, ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள், புதிதாக மாணவர் சேர்க்கைக்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், பள்ளிக் கட்டட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள், நீரேற்று நிலையங்கள், கழிவுநீரேற்று நிலையங்கள் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு விவரங்கள், அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், கூடுதலாக குடியிருப்புகள் கட்டுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகள் விவரங்கள், கூடுதலாக தேவைப்படும் மின்மாற்றிகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்து ஆய்வு

மேற்கொண்டார். நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்.

நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடித்திடவும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது தொடர்புடைய துறை அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், சுகாதாரப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும், பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் (தெற்கு) திரு.க.ச.நரேந்திரன் நாயர், இ.கா.ப., காவல் இணை ஆணையாளர் திரு.பண்டி கங்காதர், இ.கா.ப., (கிழக்கு), காவல் துறை ஆணையாளர் (மயிலாப்பூர்) திரு.கார்த்திக் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**